தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2024 நளி (திசம்-93) விலை உருபா 1-50 (இதழ் எண் : 167)

திராவிடர்-தமிழர் குழப்பம் நீங்க தமிழினம் என்றே குறிப்பிடுக!

நம் தமிழினம் இந்நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்து, தெரிந்தோ தெரியாமலோ திராவிட இனம் என்று தவறாகவே அழைக்கப் பெற்று வருகிறது. தந்தை பெரியார் அவர்களும், தமிழர்களுக்கென்று ஓர் இயக்கத்தைக் கட்டுவிக்கும் பொழுதில் அதை முதலில் நீதிக் கட்சி (ஜஸ்டிஸ் பார்ட்டி) என்றும், பிறகு தன்னுரிமைக் கட்சி (சுயமரியாதைக் கட்சி) என்றும் அழைத்து, இறுதியில் *'திராவிடர் கழகம்'* என்றே அழைத்து வந்தார். திராவிடர் கழகத்திற்கென்று தோற்றுவிக்கப் பெற்ற நாளிதழ்க்கு 'விடுதலை' என்று பெயர் சூட்டி, அதன் தலைப்பில் *'திராவிட நாடு திராவிடர்க்கே'* என்னும் கொள்கை முழக்கத்தையும் பொறித்தார். பின்னர் அவரின் இறுதிக் காலத்தில்தான், அம் முழக்கம் *'தமிழ்நாடு தமிழர்க்கே'* என்று மாற்றப் பெற்றது.

இவ்வாறு முதலில் திராவிட உணர்வாகவும், பின் அது தமிழர் உணர்வாகவும் படி நிலை (பரிணாம) வளர்ச்சி ஏற்பட்டதற்குக் காரணம், பிற்காலத்து, அவர்பால் இன வரலாற்று—குமுகாய வரலாற்று—நிலையில் ஏற்பட்ட சில மாறுதல்களும் விளைவுகளுமே ஆகும். அவரைப் பொறுத்த மட்டில், அவர்(பெரியார்) தொடக்கத்தில் கொண்ட பார்ப்பனீய எதிர்ப்புணர்வைத் திராவிட இன, அஃதாவது தெலுங்கு, கன்னட, மலையாள மொழி இன மக்களைத் தமிழின மக்களுடன் ஒன்றுபடச் செய்து, வலிவுண்டாக்கிப் பார்ப்பன அஃதாவது ஆரிய—பிராமண—மக்களின் முன் வைத்துப் போராடி அவர்களை வீழ்த்த வேண்டும் என்று கருதியதுதான். இக் கருத்தும் செயலமைப்பும் அவரின் தொடக்கக் காலகட்ட நிலைக்குப் பொருந்துவனவாகவே இருந்ததாக ஏற்றுக் கொள்ளலாம். அஃதாவது, ஆரியப் பார்ப்பனரை எதிர்க்கவும் அவரின் அரசியல், குமுகாயவியல் ஆளுமையை முறியடிக்கவும், தமிழினத்தின் வலிவு மட்டுமே போதாது என்ற நிலையில், அவர்களுடன் தெலுங்கு, கன்னட, மலையாள இன மக்களையும் ஒன்று சேர்த்துக் கொண்டு போராடிப் பார்ப்பனீயத்தை வெற்றி கொள்ள நினைத்தார், பெரியார். அந்த நிலையில் தமிழர் கழகம் என்றோ தமிழினக் கழகம் என்றோ கூறியிருந்தால், மற்ற தமிழினத்திலிருந்து பிரிந்த தெலுங்கினத்தவரோ, கன்னட இனத்தவரோ, மலையாளிகளோ, அவருடன் சேர்ந்து பார்ப்பனீயத்தை எதிர்க்க முன் வர மாட்டார்கள் என்றும், அவ்வாறானால், தமிழினம் மட்டுமே சிறுமை பெற்று வலிவிழந்து விடும் என்றும் அவர் கருதியிருக்கலாம். மேலும் அவரே ஒரு கன்னடர். ஆகையால், தமிழினம் என்று சொல்வதும் அதற்குத் தலைமைத் தாங்கவும் பொருத்தமில்லாமல் போய்விடும் என்றும் அவர் நினைத்திருக்கலாம். எனவே அவர் திராவிடர், திராவிடர் கழகம் என்று சொல்லி ஆரியப் பர்ப்பனீயத்திற்கு எதிராக ஓர் அணிதிரட்ட வேண்டிய ஒரு கட்டாயம் இருந்தது.

இதனால், பின்னர் இந்தியா மொழிவழி மாநிலங்களாகப் பிரிவுபட்ட பின்னும், அத்திராவிட இனவுணர்வையே தொடர்ந்து வளர்க்க வேண்டியதாகி விட்டது.

Scanned with CamScanner

ஆனால், 'திராவிடர்' என்னும் உணர்வும், 'திராவிடநாடு'ம் இனி செயலுக்கு உதவா என்று கண்டு கொண்ட பின்னர், தமிழர் முன்னேற்ற முயற்சிக்கான கொள்கை முழக்கத்தை மட்டும் **'தமிழ்நாடு தமிழர்க்கே'** என்று மாற்ற முடிந்ததே தவிர, 'திராவிடர்', 'திராவிடர் கழகம்' என்பதைத் தமிழர், தமிழர் கழகம் என்பதற்காக மாற்ற முடியாமற் போய்விட்டது.பின்,அதன் வழியாகவே, **'திராவிட முன்னேற்றக் கழக'**மும், பின்னர் **'அண்ணா திராவிட முன்னேற்றக் கழக'**மும் தோன்றுவது வரலாற்றுக் கட்டாயமாகி விட்டது. அதற்கு இன்னும் கண்கூடான நடைமுறைக் காரணமும் ஒன்றிருந்தது.

அஃதாவது'திராவிடர் கழகத்திலும்' 'திராவிட முன்னேற்றக் கழகத்திலும்' 'அண்ணா திராவிட முன்னேற்றக் கழக'த்திலும்,விரும்பியோ, விரும்பா-மலோ 'திராவிட' இனத்தவரான தெலுங்கர்களும், கன்னடர்களும், மலையாளிகளும் முன்னரே உறுப்-பாண்மை பெற்றிருந்ததால், 'திராவிடர்' என்னும் பெயரை மாற்ற முடியாத நிலையில் அக் கழகங்களை வழி நடத்தி செல்பவர்களாக இருந்தார்கள்.

ஆனால், இந் நிலையில் நம் **'உலகத் தமிழின தமிழின முன்னேற்றக் கழகம்'** தோன்றித் 'திராவிடர்' என்னும் சொல்லின் பொருளைத் **'தமிழினம்'** என்னும் சொல்லுக்குப் பகரமாகப் பொருள் கொள்ளச் செய்த பின், தமிழினம் என்னும் சொல் மிகவும் விரைந்து வேரூன்றத் தொடங்கி விட்டது என்று சொல்லலாம்.எனவே, **'திராவிடர்'** என்னும் சொல் பொருத்தமற்றதாகவும் அதற்குப் பகரமாகத் **'தமிழினம்'** என்னும் சொல் பொருத்த-மானதாகவும் ஆயின.

தமிழர் என்னும் சொல் தமிழரை மட்டுமே குறிப்பதாகவும், **'தமிழினம்'**என்னும் சொல் தமிழ-ரையும், அதே பொழுது தமிழினத்தின் பிரிந்த தெலுங்கர், கன்னடர், மலையாளியர் ஆகிய பிறரை-யும் கூடக் குறிக்கும் என்றும் கருத வேண்டிய-தானது. எனவே, இந் நிலையில், திராவிடர் என்-னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டியதில்லை. அவ்வாறு பயன்படுத்தவும் கூடாது.

மேலும் வரலாற்று நிலையில் **'தமிழினம்'** என்னும் சொல்லே வடமொழியில் திரமிளம், திரவிடம், திராவிடம் என்றும் திரிக்கப் பெற்றுள்ளது. ஆனால், அத்திரிபு, மொழியை நோக்கியே குறிக்கப் பெற வேண்டுமேயன்றி, இனத்தை நோக்கிக் குறிக்கப் பெறுவது வரலாற்றைப் பிறழ உணர்ந்ததாகும்.

அஃதாவது, தமிழ் அதன் வரலாற்று நிலை-யில் முதலானதும், திராவிடத்திற்கும் ஆரியத்திற்-கும் மூலமானதும் ஆகும். அதனால், தமிழ் என்பது தமிழ்மொழியை மட்டுமே குறிக்கும் என்றும், **திராவிடம்** என்பது தமிழினின்று பிரிந்த அல்லது திசைந்த தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலிய இருபத்தேழு திராவிட மொழிகளை-யும் குறிக்கும் என்றும், திராவிட மொழியியல் வல்லுநர் கால்டுவெல் ஒரு வரைமுறையை உரு-வாக்கினர். கால்டுவெல்லுக்கு முன் **திராவிடம்** என்பது தமிழ்மொழியையே குறித்தது. நாம் 'தமிழ்' என்று கூறியதைச் சமசுக்கிருத அறிஞர்-கள் **'திராவிடம்'** என்று கூறினர். எனவே திரா-விடம் ஒரு தனி மொழியன்று; அது தமிழே ஆகும். எனவே, தமிழனின்று பிரிந்த கிளை மொழிகளை ஒட்டு மொத்தமாகக் குறிக்க **திராவிடம்** என்னும் சொல் பயன்பட்டது. ஆனால் 'திராவிடம்' என்னும் சொல்லில் தமிழ் மொழி சேர்க்கப்படக் கூடாது.

இனி, இந் நிலையிலும் ஒரு வரலாற்றுப் பிழை நேர்ந்துள்ளது. அஃதாவது, திராவிடம் என்னும் சொல் ஆரியர் இவ்விந்திய நாட்டுக்கு வருமுன் இந்தியா முழுவதும் வழக்கில் இருந்த 'திராவிடம்' என்னும் மொழியே என்றும், அந்த மூல மொழியி-னின்று பிரிந்தவையே தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலிய மொழிகள் என்றும் வரலாற்றைத் தவறாகக் கூறித் தமிழையும் திராவிட மொழியாக வரலாற்றாசிரியர் சிலர் பிழை-படக் குறித்தனர். ஆரியர் இங்கு வருமுன் இந்தியா முழுமையும் பேசப்பெற்றது தமிழ்மொழியே ஆகும். அதையே அவர்கள் திராவிடம் என்றனர். எனவே ஆரியர் தமிழுக்கிட்டப் பெயரே திராவிடம். ஆனால் நாம் அதைத் திராவிடம் என்று சொல்லக் கூடாது. தமிழ் என்றே சொல்ல வேண்டும் என்க. இனி, தமிழைத் தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு போன்ற மொழிகளுக் கிணையாக வைத்து அதனை உடன் பிறந்தாள் மொழி என்னும் பொருள பட (Sister Language என்று) தவறாகக் கூறினர். ஆனால் தமிழ் அவற்றுக்கெல்லாம் மூலமொழி என்பதைத் தெலுங்கரும், கன்னடரும், மலையாளி-களும் ஒப்புக்கொள்ள மறுத்தனர். இ்து அவர்கள் தாய்மொழிப் பற்றினால் ஏற்பட்ட தவறாகும் என்க.

இவ்வாறு தமிழையும், பிற மொழிகளையும் திராவிட மொழிகள் என்று குறித்தது போலவே, அம் மொழிகள் பேசும் அனைவரையும் திராவிடர் என்றும் கூற வேண்டியதாயிற்று. இது மிகவும் தவறான வரலாற்றுப் பிழையாகும். ஆக, இன நிலையில் தமிழர் திராவிடர் ஆகார். அவர்கள் பேசும் தமிழும் திராவிடம் ஆகாது. மொழி நிலை-யில் தமிழ் வேறு; திராவிடம் வேறு என்று ஆகிய பின் தமிழரைத் திராவிடர் எனறே சொல்லக் கூடாது. அவ்வாறு சொன்னால் தமிழர் என்றோர் இனமே இல்லாமற் போய்விடும்.

எவ்வாறெனில், மொழி நிலையில் தங்களைத் தெலுங்கர், கன்னடர், மலையாளியர், துளுவர் என்றே கூறிக் கொள்ளும் அவர்கள், இன நிலையில் தங்களைத் திராவிடர் என்று கூறிக் கொள்ள விரும்புவதில்லை.

(தொடரும்)

பார்ப்பனியத்தின் நச்சுணர்வுகள்!

-புலவர். அறிவுடைநம்பி.

பார்ப்பனனையும், பாம்பையும் ஒரே நேரத்தில் கண்டால், முதலில் பார்ப்பனனை அடித்து விட்டுப் பின்னர் தான் பாம்பை அடிக்க வேண்டும்'' என்று தந்தைபெரியார் அவர்கள் கூறியதாகச் சொல்வார்கள். இதன்மூலம் பார்ப்பனர்கள் எத்தகைய கொடியவர்கள் என விளக்கியுள்ளார் பெரியார். இத்தகைய கொடியவர்களின் கொட்டம் இத் தமிழ் மண்ணில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகக் கொடிகட்டிப் பறந்தது. அதன் விளைவாய், இம் மண்ணுக்குரிய தனித்தன்மைகள் அழிக்கப் பட்டன: மொழி சிதைக்கப் பட்டது; பண்பாடு குலைக்கப்பட்டது; அரசாட்சியே அவர்கள் காலடியில் கிடந்தது. இங்குள்ள அரசர்களெல்லாம் வேத நெறிப்படி ஆண்டார்கள். மனுநெறி தவறாது ஆட்சி நடத்தினார்கள் எனக் கல்வெட்டுகள் பேசுகிறதேயொழிய, குறள் நெறி ஆட்சி நடத்தினான் என எந்த அரசனையும், யாரும் பாராட்டியதாகச் சான்றுகள் இல்லை. ஆங்கிலேயர் வந்தபின்; பலரும் கல்வி கற்கலாம் என்ற நிலை உண்டானபின்; சற்று விழிப்புணர்வு தோன்றியது. தந்தை பெரியார் போன்றவர்கள், பொதுவாழ்வில் ஈடுபட்ட பின்னர், இந்த நூற்றாண்டில்தான் பெரும் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. பார்ப்பனியத்தின் பிடி நெகிழத் தொடங்கியது.

அவர்களும் தங்கள் வல்லாண்மையை நிலைப் படுத்த செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். இருந்தாலும் இன்றையக் காலக் கட்டத்தில் அவர்களுடைய இழிவான செயல்களும் கீழறுப்பு வேலைகளும், கோள்மூட்டிவிடும் வேலைகளும, குழி பறிக்கும வேலைகளும் மனக் குமறல்களும், குமைச்சல்களும், குடைச்சல்களும் உச்சநிலை அடைந்து விட்டன. அவற்றை வெளிப்படுத்தும் வாயில்களாக இருப்பவை, பார்ப்பன ஏடுகளேயாகும். இந்த இளித்த வாய்த் தமிழனால் அவனை இழிவு படுத்தும், அவனது வளர்ச்சியை வீழ்த்த நினைக்கும் ஏடுகள் தானே அவனால் வளர்க்கப் படுகின்றன. தமிழனாலேயே வளர்ந்து, அவனுக்கே குழிப்பறிபபது தானே பார்ப்பனியத்தின் திறமை. அவர்கள் உணர்வுகள் எவ்வளவு நஞ்சாய் இருக்கின்றன என்பதைக் கீழ்வரும் கட்டுரையே சான்றாகும்.

தினமலர், என்ற பார்ப்பனிய நாளேடு ஒன்று வெளிவருகிறது. அத் 'தினமலரில்' 7-5-90 பக்கம் 2 மலர் 39 இதழ் 241 தமிழ்நாடு அமைதிப் பூங்காவா? என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளி வந்துள்ளது. அதன் கருப்பொருள். 11-2-90-ஆம் நாள் மதுரையில் நடந்த வீர வணக்க நாள் கூட்டம் இது. 1988-ஆம் ஆண்டு கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையக் கோபுரத்தைக் குண்டு வைத்துத் தகர்க்கும் முயற்சியில் உயிர்நீத்த விடுதலை மறவன் மாறனின் நினைவாகக் கூட்டப் பெற்றது. விடுதலை மறவன் பொழிலன் தலைமையில் நடைபெற்றது. அத் தினமலரே நாற்பது, ஐம்பது இளைஞர்கள் கொண்ட கூட்டம் எனக்குறிப்பிட்டுள்ளது. ஆனால் அக் கூட்டத்தின் மீது அதற்கிருந்த ஆற்றாமை, காழ்ப்புணர்வு, பொறுக்க இயலாமை, நச்சுணர்வு, பொறாமை, இழிவு படுத்த வேண்டும் என்ற இழிந்த எண்ணம், சிறுமைப் படுத்த வேண்டும் என்ற கெட்ட நோக்கம், தமிழர் நலனுக்காக உழைப்போரை, இழிவும், சிறுமையும் செய்து கொச்சைப் படுத்த வேண்டும் என்ற புல்லிய தன்மையான இழி மனம் ஆகியவற்றை அக் கட்டுரையில் கூறியவறே காண்போம். அவர்களது நச்சுணர்விற்கு இஃது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அன்பர்கள் இதை நன்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

இனிக் கட்டுரையை நோக்குவோம். ''மாறன் வேறு யாருமல்லர்; கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையத்தைக் கடநத 88-ஆம் ஆண்டு குண்டு வைத்துத் தகர்க்க முயற்சி செய்தவர். திருச்சி மலைக் கோட்டை விரைவு வண்டிக்குக் குண்டு வைத்துப் பெரும் ஏதத்தை ஏற்படுத்திய தமிழரசன் கூட்டாளியும் கூட'' என்று கூறிவிட்டு, ''அக் கூட்டத்தில் பேசியவர்களைக் குறிப்பிட்டதாவது, திரு, இராமதாசு அவர்களைக் குறிப்பிடும்போது, ''தொடர்ந்து மலைக் கோட்டை எக்சுப்பிரசு இரயிலை வெடி குண்டு வைத்துத் தகர்த்து, கைதான வழக்கில், தமிழரசனின் கூட்டாளிகளின் சார்பில் வழக்காடிய வழக்கறிஞர் இராமதாசு பேசினார்'' எனவும்'' பெருஞ்சித்திரனார் பேசுகையில்'' எனவும் ''கூட்டத்தில் தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் நெடுமாறன் பேசுகையில் கூறியதாவது'' எனவும் கூறி தனது இழிவுத் தனத்தை வெளிப்படுத்தியதோடு ''ஏராளமான புலனாய்வுத்துறையினர் குறிப்பெடுத்து மாநில அரசிற்கு அனுப்பியுள்ளனர். ஆனால் இரண்டு வாரங்களுக்கு மேலாகியும் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை''''அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காது என்ற துணிவுடன் தான் இக் கூட்டத்தை நடத்தியதாக இளைஞர்கள் பேரவையினர் கூறிக் கொள்கின்றனர்'' எனவும், கூறிக் கொள்கிறது தினமலர்.

''மேலும் பிரிவினை வாதத்துடன் செயல்படும் இது போன்ற இயக்கங்களின் செயல்பாடுகளை அரசு, கண்டும், காணாமல் இருக்குமானால் முதல்வர்

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

நகரங்களால் நலிவடையும் கம்மங்கள்!

-செ.நல்லசாமி-

"இந்தியா ஏழு இலக்கம் கம்(கிரா)மங்களில் வாழ்கிறது;
இக் கம்(கிரா)மங்கள் அழிந்தால் இந்தியா அழியும்" —காந்தியடிகள்.

கம்(கிரா)மங்களின் அழிவு ஆங்கிலேயர் காலத்தில் தொடங்கியது. உரிமை பெற்ற பின்பும் இந்த அழிவு தொடர்கிறது. நகரங்களை நாடி நாள்தோறும் மக்கள் இடம் பெயர்கின்றனர். இதனால் இந்தக் கம்(கிரா)மங்கள் இளைத்தும் நகரங்கள் வீங்கியும் வருகின்றன. நகரத்தை நாடிச் சென்றவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துள்ளது. சிற்றூர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரம் வறுமைக் கோட்டிற்குக் கீழே வைக்கப்பட்டுள்ளது. கம்மங்களில் பொருளீட்டி நகரங்களில் முதலீடு செய்வது நடைமுறையில் உள்ளது. வேளாண்மையில் முதலீடு செய்வது வெகுவாகக் குறைந்து விட்டது. கம்மங்களில் வாழ்வோர் இன்று இரண்டாம் தர குடி மக்கள்.

ஒரு காலத்தில் அயல் நாட்டுச் செலாவணி ஈட்டித்தந்த கைத்தறி நெசவு உள்ளிட்ட அனைத்துக் கம்மக் கைத் தொழில்களும் அழிவின் விளிம்பில் நிற்கின்றன.

"எளிய வாழ்க்கை உயரிய எண்ணம்" என்ற உயரிய கொள்கை உயிரிழந்து விட்டது.

"உயரிய வாழ்க்கை எளிய எண்ணம்" என்ற தாழ்ந்த கொள்கை தலை தூக்கி உள்ளது.

திரைப்படங்கள் திரையில் தோன்றி மறையும் ஒரு கற்பனை. கனவு உலகிற்குக் காண்போரை இட்டுச் செல்லும் ஒரு மாயை. ஆயிரக் கணக்கான சிற்றூர்ப் புற (கிராம)மக்களின் அறிவுக் கண்கள் இதனால் குருடாக்கப்பட்டுள்ளன.

சிற்றூர்ப்புற பண்பாட்டையும், நாகரீகத்தையும், கலையொழுக்கங்களையும் இன்றைய திரைப் படங்கள் வெகுவாக சிதைத்து விட்டன.

கம்மங்கள் தன்னிறைவு அடையவில்லை. அதிகாரப்பரவல் கொள்கைக்கு மாறாக மாநில அரசு அதிகாரங்களைத் தன்னகத்தே குவித்து வைத்துள்ளது. உள்ளாட்சி, கூட்டுறவு உள்ளிட்ட அனைத்து அமைப்புகளிலும் இன்று மக்களாட்சி இல்லை. இவை இன்று சிற்றூர்ப்புற மக்களுக்கு நன்மை பயப்பதற்கு மாறாகப் பெரும் தீங்கு விளைவிக்கிறது.

சிற்றூர்ப்புற மக்களை ஆடு மாடுகளைப் போன்று எந்தப் பக்கம் வேண்டுமானாலும் ஓட்ட முடியும். இவர்களின் அறியாமையை ஒப்போலை (ஓட்டு)களாக மாற்றி அறுவடை செய்வது இன்றைய அரசியல் நடைமுறை ஆகும்.

கம்(கிரா)மங்கள் நகரங்களால் நிலையாகச் சுரண்டப்படுகின்றன. நகரங்களில் அனைத்து வேளாண்மைப் பொருள்களும் ஓரிடத்தில் கிடைக்கின்றன. சில நேரங்களில் வீடு தேடியும் வருகின்றன. விளைவிக்கும் கம்மங்களில் வாழ்வோர் காய்கறி, பழங்கள், உள்ளிட்ட அனைத்துப் பொருட்களையும் வாங்க நகரங்களுக்குச் செல்ல வேண்டி இருக்கின்றது. இதற்கு வசதியாக நகரப் பேருந்துகள் பெரும் அளவு விடப்பட்டுள்ளன.

சிற்றூர்ப்புறப் பள்ளி ஆசிரியர்கள், வைப்பக ஊழியர்கள், சிற்றூர்ப்புற ஆட்சி ஊழியர்கள் உள்ளிட்ட அனைத்து அரசுத்துறை அதிகாரிகளும் நகரங்களில் குடியிருந்து கொண்டு கம்(கிரா)மங்களில் பணிபுரிகின்றனர்.

கம்ம மக்கள் நகரங்களில் வாழ்வோர்க்கு வசதியாக திருமணங்கள் உள்ளிட்ட அனைத்து நிகழ்ச்சிகளையும் நகரங்களிலேயே நடத்துகின்றனர்.

அன்றாட வாழ்வில் கம்ம மக்கள் நகரங்களை நாடிச் செல்ல வேண்டிய கட்டாயத்திற்கு வலிய முறையில் செயற்கையாகத் தள்ளப்பட்டுள்ளனர்.

அதே நேரத்தில் நகர மக்கள் கம்மத்தை நாடிச் செல்ல வேண்டிய தேவையே இல்லாத அளவிற்குச் சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கம்(கிரா)மத்தில் யாராவது இறந்துவிட்டால் துயர உசாவலுக்கு மட்டுமே இன்று நகர மக்கள் கம்மங்களுக்கு வருகின்றனர். கம்மத்தில் இறந்தவரது உடலை நகரத்திற்கு எடுத்துச் சென்று ஒரு மண்டபத்தில் வைத்து இறுதிச் சடங்கு செய்கின்ற நிலை எதிர்காலத்தில் ஏற்பட்டாலும் வியப்படைவதற்கு இல்லை.

உரிமை இந்தியாவிலுள்ள நகரங்களின் நிலையான அடிமைகளாக சிற்றூர்ப்புற மக்கள் ஆக்கப்பட்டுள்ளனர்.

அன்று ஆங்கிலக் குடியேற்ற நாடுகளின் வல்லாளுமையின் (ஆதிக்கத்தின்) கீழ் இருந்த இந்தியக் கம்மங்கள் இன்று நகரங்களின் அடிமை நாடுகளாக மாறியுள்ளன. இது நாட்டிற்கு நல்லது அன்று. O

O இலங்கை வரவு செலவுத் திட்டத்தில் விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்காக 1.54 கோடி உருவா ஒதுக்கப் பட்டது. ஆனால் இது போதாது 300 கோடி உருபா தேவை என்று அரசு தெரிவித்துள்ளது. இத்துடன் இதுவரை இலங்கை அரசின் பாதுகாப்புச் செலவு 2 விழுக்காடாக இருந்தது. விடுதலைப் புலிகளால் இச் செலவு 10 விழுக்காடாக ஆகி விட்டது என்றும் அரசு கூறுகிறது.

Scanned with CamScanner

இந்திய அரசும் தமிழகப் பாட்டாளி மக்களின் விடுதலையும்!

க. கண்ணன். அறி.இ. கரடிப்பட்டி.

முகவுரை:

இன்று இந்திய அரசு என்பது, ஆரியமும் முதலாளியமும் ஒன்றிணைந்து கொண்டும், ஒன்றையொன்று நிறைவு செய்து கொண்டும், இங்குள்ள பல்வேறு மொழித் தேசிய இனங்களிலுள்ள பாட்டாளி மக்களாகிய உழவர்கள், தொழிலாளர்கள், சிறு தொழில் செய்வோர் அல்லது சிறு வணிகம் செய்வோர் ஆகிய அனைவரையும் சுரண்டுகிறது. இந் நிலைமையை நடு நிலை உள்ளம் கொண்ட, மாந்த நேயப் பற்றுள்ள சாதி, மத, மொழி, இன, பிரிவினச் சார்பு அற்ற நிலையில் சிந்திக்கும் எவரும் இன்றைய குமுகாய அரசியல் பொருளியல் நிலைகளில் நடக்கும் போராட்டங்களிலிருந்தும், உண்மையான குமுகாயச் சிந்தனையாளர்களின் வரலாற்று விளக்கங்களிலிருந்தும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

கடந்த காலங்களில் இந்தச் சிக்கலைத் தெளிவாகப் புரிந்து கொண்டு, கருத்துகளை மக்களிடம் எடுத்துச் சென்று அவர்களை அணி திரள வைக்கும் முயற்சி சரியான திசையில் நடைபெறவில்லை. அவ்வாறு நடைபெற முடியாத அளவிற்கு முன்னணித் தலைவர்களின் பிரிவினச் சார்பு காரணமாக இருந்திருக்கலாம், அல்லது மக்கள் சரியான திசையில் செல்ல முடியாமல் மேற் குறிப்பிட்ட ஆரியப் பார்ப்பனிய முதலாளிய ஆற்றல்கள் இவ் வமைப்புகளை திசைதிருப்பியும் சிதைத்தும் இருக்கலாம்.

உண்மையான மக்கள் நலத் தொண்டர்கள் இன்று மொழித் தேசிய இன விடுதலை வடிவில் மக்களை அணி திரட்டுகின்றனர். பல்வேறு மாநிலங்களிலும் நடக்கும் போராட்டங்களே இதற்குச் சான்றாகும். இந்திய அரசு என்பது ஆரியப் பார்ப்பனர்களாலும் வட இந்தியத் தரகு முதலாளிகளாலும் எப்படி ஆளப்படுகிறது; இவ் வரசுக்கு பல்வேறு மொழித் தேசிய இனங்களிலுள்ள நிலவுடைமையர் மற்றும் தரகு முதலாளிகள் எந்தெந்த வகையில் துணை நிற்கின்றனர். அந்தந்த மொழித் தேசிய இனங்களிலுள்ள பாட்டாளி மக்கள் எந்தெந்த வகையில் பிளவுப் பட்டு ஒருவரையொருவர் அழித்துக் கொண்டு பொது எதிரியை அடையாளம் காண முடியாமல் இருக்கின்றனர்; இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் உள்ள பாட்டாளி மக்களின் வாழ்க்கைச் சிக்கலை எவ் வகையில் தீர்ப்பது—போன்ற வினாக்களுக்கு பின் வரும் விளக்கங்களால் தெளிந்து கொள்ளலாம். தெளிவடைய முடியாதவர்கள் இவை தொடர்பான கருத்துகளில் மேலும் தங்களது சிந்தனையைச் செலுத்துமாறு வேண்டுகிறேன்.

ஆரியம்: உளவியல் முறையில் மக்களை ஒடுக்கி ஆளும் பிரிவின மக்களை அடிபணிய வைப்பதில் மற்ற மதங்களை விட ஆரியப் பார்ப்பனிய மதமாகிய இந்து மதத்திற்கு அதிகப் பங்குண்டு. வளர்ச்சியற்ற நிலையில் பல்வேறு இனக் குழுக்களின போராட்டங்களாலும் உள் முரண்பாடுகளாலும் சிதைந்து பிரிந்த பல்வேறு மக்கள் கூட்டங்களைச் 'சாதிகளாக' அந்தந்த நிலையிலேயே கட்டமைத்துச் சாதிய வட்டத்தைவிட்டு, மொழி அடிப்படையில் பெரிய இன வட்டத்திற்கு வரவிடாமல் செய்ததில் ஆரியத்தின் பங்கு மிகப் பெரியது. மக்களை அறிவு முழுமையாகச் சிந்திக்க விடாமலும் சிந்திப்பவர்களை திசை திருப்பியும், தண்டித்தும் தங்கள் ஆளுமையைக் கடந்த 2000 ஆண்டுகளாகத் தக்க வைத்துக் கொள்வதில் ஆரியப் பார்ப்பனியம் மிகப் பெரிய வெற்றியைக் கண்டுள்ளது.

'இந்தியா' என்ற வெள்ளையர்கள் வைத்த பெயர் இருந்தாலும் 'பாரதம்,' 'பாரத்' 'ஹிந்துஸ்தான்' 'ஆரியவர்த்தம்' போன்ற வடமொழிப் பெயர்களையும் புராண இதிகாசச் சிந்தனைகளையும் மக்கள் மனத்தில் இருந்து அகன்று விடாதபடிக்குத் தொடர்ந்து செய்துவருகின்றது. அன்று கதை, கலாட்சேபம் நாடகங்கள் வழிச் செய்ததை இன்றும் தொலைக்காட்சியிலும் வானொலியிலும் செய்தித்தாள்கள் வழியும் இச் சிந்தனைகளைப் பரப்பி வருகிறது. தங்களுடைய மொழியில் கல்வி கற்க முடியாமலும், மக்கள் நம்பிய கடவுள்களைத் தங்கள் மொழிகளிலே வழிபட முடியாமலும், வடமொழியிலே தங்கள் ஆளுமைக்காகத் தொடர்ந்து செய்து கொண்டுள்ளதை மக்கள் ஒன்றிணைந்து எதிர்க்க முன் வரவில்லையென்றால், அதற்குக் காரணியம் மக்கள் உளவியல் முறையிலே அடிமைப்படுத்தப்பட்டுள்ளனர். தங்களின் உரிமை என்ன என்பதையோ, தங்களின் வறுமைக்கான காரணம் என்ன என்பதையோ, தங்களின் வரலாற்றுப் பின்னணி என்ன என்பதையோ மக்கள் புரிந்து கொள்ள முடியவில்லை, அல்லது புரிய வைக்கவில்லை.

இந்தியாவில் மன்னராட்சிக் காலங்களிலும் பின்னர் போலியாக உருவாக்கப்பட்ட குடியரசு ஆட்சிக் காலங்களிலும் மன்னருக்கு அடுத்த நிலையில் பெரும்பாலும் ஆரியப்பார்ப்பனர்களே ஆட்சி அதிகாரத்தில் இருந்து மக்களை ஆட்டிப் படைத்திருக்கின்றனர். உரிமை உணர்வுகள் கிளர்ந்து

எழும் இன்றைய நிலையிலும் அவர்களே முகாமைப் பொறுப்புகளில் இருக்கின்றனர். அல்லது பார்ப்பனியச் சிந்தனையுடையவர்களே இருக்கின்றனர் என்றால் இதனுடைய வலிமையை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

முதலாளியம்:

நிலவுடைமைக் குமுகாய அமைப்பில் தோன்றிய அரச குலங்கள், ஆங்கிலேய ஆட்சிக்குப் பின் வீழ்த்தப்பட்டு, இந்த இடத்தில் ஆரியப்பார்ப்பனர்களில் ஒரு பிரிவினரும், மற்ற உயர் சாதி நிலவுடைமையாளர்களில் ஒரு பிரிவினரும் படிப்படியாக முதலாளிய ஆற்றல்களாக மாறினர். இன்று டாட்டா, பிர்லா போன்ற தரகு முதலாளிய ஆற்றல்களும் அதிகார நிலையில் உள்ள உயர் சாதியினருமே இந்தியாவில் உள்ள அனைத்துப் பாட்டாளி மக்களையும் ஆட்டிப் படைக்கின்றனர். இந்து மத வெறியைத் தூண்டிவிட்டு எப்படி இந்தியாவில் தங்கள் ஆளுமையைத் தக்கவைத்துக் கொள்ள ஆரியப் பார்ப்பனியம் முயலுகிறதோ அதே போன்று இந்தியா முழுவதிலுமுள்ள பாட்டாளி மக்களின் உழைப்பையும் விளை பொருள்களையும் சுரண்டுவதற்காக முதலாளியம் 'ஒரிந்தியா,' 'தேசிய ஒருமைப்பாடு' என்ற மந்திரங்களை ஓயாமல் ஓதிக் கொண்டுள்ளது.

ஆரியமும் முதலாளியமும்:

ஆரியப்பார்ப்பனிய ஆற்றல்களும் முதலாளிய ஆற்றல்களும் எவ்வாறு ஒன்றையொன்று தழுவிக் கொண்டு உயிர் வாழ்கின்றன என்பதை கீழ்வரும் எடுத்துக் காட்டுகளால் உணரலாம்.

இந்து மதத்திலுள்ள இந்து முன்னணி, விசுவ ஹிந்து பரிசத் போன்ற பல்வேறு மத அமைப்புகளும் மற்ற பார்ப்பனியச் சிந்தனையுடைய தாளிகைகளும் பாட்டாளி மக்களின் இறுதிக் குறிக்கோளாகிய பொதுவுடைமை அமைப்பிற்கு எதிரான கருத்துகளை நாள்தோறும் பரப்பி வருவதை அறியலாம். மேலும் டாட்டா, பிர்லா போன்ற முதலாளிகள் கோயில் கட்டுவதையும், மத விழாக்களுக்கு மிகுந்த நன்கொடைகள் வழங்கி மக்களை வேடிக்கை, விளையாட்டு, பக்தி போன்ற வெறி மயக்கு (போதை)களிலே மூழ்கடிப்பதையும் காணலாம்.

பாட்டாளி மக்களை ஒடுக்குவதற்கு அந்தப் பாட்டாளிப் பிரிவிலிருந்த சிலருக்குப் பதவி மற்றும் ஆடம்பர வாழ்க்கை வசதிகள் ஆசை காட்டிக் காவல்துறை, படைத்துறை போன்றவற்றிற்குக் கூலி ஆட்களைத் திரட்டி வளர்த்துக் கொள்கிறது. தேசப் பாதுகாப்பு,பக்கத்து நாடுகள் படையெடுப்பு, போன்ற பூச்சாண்டிகளைக் காட்டி படைத்துறையை மக்கள் வரிப்பணத்தில் இருந்து புதினப் படுத்திக் கொள்கிறது. தங்கள் பிரிவைச் சேர்ந்தவர்களே தங்கள் உழைப்பால் வளர்ந்துக் கொண்டு முதலாளிகளின் ஏவலின் போது பாட்டாளி மக்களையே கொன்றும், பெண்களைக் கற்பழித்தும், பொருள்களைக் கொள்ளையிட்டும் வருகின்றதைப் பாட்டாளி மக்கள் இன்னும் முழுமையாக உணரவில்லை. இந்தியாவில் உள்ள மக்களை ஒடுக்குவதற்கு மட்டுமின்றிப் பக்கத்திலுள்ள நாடுகளையும் சுரண்டுவதற்குத் தேசிய வெறியூட்டித் தன் கூலிப் படையை ஏவி விடுகின்றது. இந்த ஆரிய முதலாளிய சூழ்ச்சிகளை எல்லாம் சிற்றூர்ப் புறங்களிலுள்ள உழவர் குடும்பத்தினரோ அல்லது தொழிலாளர் பிரிவினத்தைச் சேர்ந்தவர்களோ தெளிவாகத் தெரிந்துக் கொள்ள இயலாது.

மொழித் தேசிய இன முதலாளிகள்:

இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள பல்வேறு மாநிலங்களிலுள்ள மொழித் தேசிய இன நிலவுடைமையாளர் மற்றும் முதலாளிகள் தங்களுடைய சொத்துகளை காப்பாற்றிக் கொள்ளவும் மேலும் வளர்த்துக் கொள்ளவும், அந்தந்த மாநிலத்துப் பாட்டாளி மக்களிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ளவும் வலிவுள்ள இந்திய படைத்துறை தேவை என்று கருதுகின்றனர். மேலும் மத அடிப்படையில் அனைத்து இந்தியச் சிந்தனையில் அவர்கள் மூழ்கியுள்ளனர். ஒவ்வொரு மாநிலத்திலும் மொழிஇன மற்றும் சாதி, மதப் போராட்டங்கள் தீவிரமாகும்போது நடுவண் படைகளை அழைத்து அதை ஒடுக்குவதை நாம் நடைமுறையில் காணலாம்.

இன்று ஒவ்வொரு மாநிலத்திலும் வட இந்தியப் பெரு முதலாளிகளால் தாக்கப் படுவதைத் தேசிய இன மக்களும் அந்தத் தேசிய இனமுதலாளிகளில் ஒரு சிலரும் உணரத் தொடங்கியுள்ளனர். தாக்கப்பட்டவர்கள் பஞ்சாப், காசுமீரம், போன்ற மாநிலங்களில் தேசிய இன விடுதலைப் போராட்டங்களைத் தொடங்கியுள்ளனர். இந்திய அரசு அப்போராட்டங்களை மதவெறிப் போராட்டமாகவும் இந்திய ஒருமைப் பாட்டுக்கு எதிரானதாகவும் கொண்டு, இந்தியத் தேசிய வெறியைத் தூண்டியும் இந்துமத வெறியைத் தூண்டியும் ஒடுக்குகின்றது. இவற்றை அண்டை நாடுகள் தூண்டுவதாகவும் மக்களிடம் கருத்துப் பரப்பல் செய்கின்றது. இந்நிலையில் அந்தந்த மொழித் தேசிய இனத்திலுள்ள பாட்டாளி மக்கள் இவ் விடுதலையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இல்லையெனில் இன வெறிக்கும் மத வெறிக்கும் ஆட்பட்டுப் பட்டாளி மக்கள் தொடர்ந்து அடிமை நிலையிலேயே இருக்கக் கூடிய சூழ்நிலை உருவாகும்.

பாட்டாளி மக்கள்:

ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள பாட்டாளி மக்கள் உழவர்களாகவும் தொழிலாளர்களாகவும் மற்றும் உதிரிப் பாட்டாளிகளாகவும் இருக்கின்றனர். கம்மங்

Scanned with CamScanner

களில் உழவர்களாலும் நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களாலும் கடினமான உடல் உழைப் பின் மூலம் உருவாக்கப்படும் விளை பொருள்கள் சிறு வணிகர்கள் மூலம் நகர்ப் புறங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு, மொத்த வணிகர்கள் கைக்குப் போகின்றன. விளைவு செய்யப்படுகின்ற பொருள்களில் உழவர்களுடைய உடல் உழைப்பு உருவாக்கச் செலவு இயற்கையினால் ஏற்படுகின்ற தாக்கம் எதையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் அதிக ஊதியம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு மொத்த வணிகர்கள் விலை உறுதி(நிர்ணயம்) செய்கின்றனர். தமிழ்நாட்டில் உள்ள மொத்த வணிகர்களும் வடநாட்டு மார்வாடிகளிடமும் பொருள் நிறுவனங்களிடமும் சிக்கிக் கொண்டு தவிக்கின்றனர். ஆக சிறு வணிகர்களிடமிருந்து நகர்ப் புற வணிகர்கள் பெருவணிகர்கள், பொருள் முதலீடு இடுவோர் ஆகிய அத்தனைப் பேருடைய வாழ்க்கைத் தேவைக்கும் வசதிக்கும் உழவர்கள் உழைத்துக் கொடுத்து விட்டு இவர்கள் வறுமையிலேயே வாடுகின்றனர்.

பாட்டாளிப் பிரிவின அமைப்புகள்:

இந்தியப் பார்ப்பனிய—முதலாளிய அரசை வீழ்த்திப் பாட்டாளிய மக்களுக்கான அரசை அமைக்க வேண்டுமென்று போராடும் இயக்கங்கள் இந்தியாவில் ஏராளமாக இருக்கின்றன. கருத்து முரண்பாடுகளாலும் அல்லது நடைமுறைச் சிக்கலைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாததாலும் புதிய புதிய அமைப்புகள் தோன்றிக் கொண்டே உள்ளன. இவ்வமைப்புகள் புதியதாகக் குமுக, பொருளியல் சிந்தனைகளால் ஈர்க்கப்படும் இளைய தலைமுறையைக் குழப்பி விடுகின்றன. இன்று இளைய தலைமுறையினர் தெளிவடைய முடியாமல் கிழ்க்காணும் கருத்து நிலைகளில் குழம்புகின்றனர்.

இந்தியா என்பது ஒரே நாடா அல்லது பல்வேறு மொழி இனப் பண்பாடுகளையுடைய நாடா என்பது இன்னும் பலர்க்குத் தெளிவில்லாத ஒன்று.

இதில் ஆரியமும் முதலாளியமும் தங்கள் ஆளுமையைத் தக்க வைத்துக் கொள்ள ஆங்கிலேயர்களின் அரசமைப்பை அப்படியே பின்பற்றுகின்றன. இதே ஓரிந்தியா கருத்தைப் பாட்டாளிப் பிரிவின ஒற்றுமை என்னும் பெயரில் முற்போக்கான அமைப்புகளும் விடாமல் பிடித்துக் கொண்டுள்ளன. கன்னியாகுமரியிலுள்ள ஒரு பாட்டாளி காசுமீரத்திலுள்ள ஒரு 'பாட்டாளியோடு உணர்வு 'முழுமையாக ஒன்றுபடுவான் என்பது மிகப் பெரிய கற்பனையே. உழைப்பின் நிலையில் பாட்டாளிப் பிரிவைச் சேர்ந்தவர்கள்தாம் , என்றாலும், அவர்களைச் சுற்றியுள்ள மக்களின் சாதி, மதம், மொழி, தொழில் போன்ற சூழ்நிலைகளின் தாக்கம் இருவருக்கும் வெவ்வேறாகவே இருக்கின்றது. ஆகவே ஆளும் பிரிவினம் மேலும் கெட்டிப் படுவதற்கும் சுரண்டுவதற்கும் ஆன கருத்தை உடைப்பதற்கான மாற்று வழிக் கருத்தை நாம் உருவாக்க வேண்டும்.

சாதியம்: பாட்டாளி மக்களைப் பிளவு படுத்துவதற்குச்'சாதி' மிகப் பெரும் ஆற்றலாகத் தொடர்ந்து இருந்து வருகின்றது. இதனுடைய தாக்கங்களே இன்று இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாந்தனின் மனத்திலும் ஆழமாக பதிந்துள்ளன. விரைந்த குமுக மாற்றம் ஏற்படாமல் தேங்கிய குட்டைப் போல் அழுகி நாறுகின்றன. அழுகிய குட்டையைத் தூய்மைப்படுத்தக் கிளம்பியோரும் வெவ்வேறு திசையில் நின்று கொண்டும், ஒருவரையொருவர் குறை சொல்லிக் கொண்டும் இருக்கின்றனர். இந்தியா முழுவதும் தாழ்த்தப்பட்ட மக்களை ஒன்றுபடுத்தும் இயக்கங்களும் அமைப்புகளும் பலவாக இருக்கின்றன. பிற்படுத்தப்பட்ட மக்களை ஒன்றிணைக்கும் இயக்கங்களும் பலவாக இருக்கின்றன. இதிலும் மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள் அமைப்புகள் புதியனவாகத் தோன்றியுள்ளன. நாளை மிக மிகப் பிற்படுத்தப்பட்ட அமைப்புகளும் தோன்றிக் கொண்ட இருக்கும்.

சாதிய ஒடுக்கு முறையின் தன்மை இந்தியா முழுவதும் ஒன்றாக இல்லை. தமிழ்நாட்டில் உள்ள ஒரு தாழ்த்தப்பட்டவரோ அல்லது பிற்படுத்தப்பட்டவரோ எந்தவகையிலும் உத்திரப் பிரதேசத்தில் உள்ள தாழ்த்தப் பட்டவரோடும் அல்லது பிற்படுத்தவரோடும் உடல் அமைப்பிலோ அல்லது அரத்தக் கலப்போ அல்லது மொழி, பண்பாட்டுக் கலப்போ உடையவராக இல்லை. உணர்வு முழுமையாக ஒன்றுபட முடியாத ஒரு கருத்தை வலிந்து திணித்துக் கொண்டுள்ளனர். பாட்டாளிப் பிரிவின அமைப்புகளும் அனைத்து இந்தியம் ஓரிந்தியம் என்று மக்களைச் சரியான திசையில் செலவிடாமல் திசை திருப்புகின்றனர். உத்திரப்பிரதேசத்தில் உள்ள யாதவருக்கும் தமிழ்நாட்டில் உள்ள கோனாருக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? அதே போல் தமிழ்நாட்டில் உள்ள தேவருக்கும் மேற்கு வங்காளத்தில் உள்ள ஒரு குறிப்பிட்ட கட்சியின ருக்கும் (இந்திய பார்வார்டு பிளாக்) என்ன தொடர்பு இருக்கிறது? இவ்வாறே இந்தியாவில் உள்ள ஒவ்வொரு சாதிக்காரனும், தன் பக்கத்து வீட்டுக்காரனைப் பற்றியோ அல்லது நிலத்துக் காரனைப் பற்றியோ அல்லது பக்கத்துக் கம்மத்துக் காரனைப் பற்றியோ கவலைப்படாமல், அவனோடு முரண்பட்டு, எங்கோ உள்ளவனோடு செயற்கையாகச் சேர்வதற்கு துடித்துக் கொண்டுள்ளனர்.

மதம்: சாதியைப் போலவே பல்வேறு மதக் கருத்துகளும் மக்களை ஒன்றுபட விடாமல் செய்து கொண்டுள்ளன. அவ்வாறு அந்தந்த மதத்திலுள்ள

தலைவர்கள் சுரண்டுவதற்காக அனைத்து இந்திய அல்லது அனைத்து உலகக் கருத்தாக்கத்தை நோக்கி ஒவ்வொரு மதத்தினரும் மக்களை இட்டுச் செல்கின்றனர் அல்லது அமைப்பாகச் செய்வதற்கு முயற்சி செய்கின்றனர்.

இட ஒதுக்கீடு: இட ஒதுக்கீடு கொள்கையும் படித்த பிரிவினத்தினரிடையே பெரிய பிளவை ஏற்படுத்தியுள்ளன. தங்கள் தங்கள் சாதியில் படிக்க வாய்ப்பில்லாமலும் தொடர்ந்து வறுமையிலேயே வாடிக்கொண்டும் இருக்கும் மக்களைப் பற்றிச் சிந்திக்காமல், தாங்கள் படித்த கல்விக்கான வேலை தேடுவதிலும், அதற்காகத் தன் சாதியைச் சேர்ந்த மக்களை அணி திரட்டுவதிலுமே காலத்தைக் கழிக்கின்றனர். அரசுப் பதவியில் இருப்பவர்களுக்கு அனைத்து இந்திய அளவிலான இயக்கங்களும் அமைப்புகளும் இந்திய உணர்வை ஏற்படுத்துகின்றன.

தமிழகப் பாட்டாளி மக்கள் விடுதலை:

இத்தனைக் குழப்படிகளிலிருந்தும் பிளவுகளிலிருந்தும் விடுபட்டு, விரைந்து முன்னேக்கிச் செல்லும் திசைதான் தமிழகப் பாட்டாளி மக்கள் விடுதலை அல்லது தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை. தங்கள் வளர்ச்சிக்கும் ஒற்றுமைக்கும் பாலமாக இருக்கின்ற மொழியையும் பண்பாட்டையும் நடுவமாக வைத்து நாம் மக்களை அணிதிரட்ட வேண்டும். இதற்கு எதிராக உள்ள அனைத்துக் கருத்துகளையும் நாம் ஒதுக்கித் தள்ள வேண்டும். பல்வேறு பிரிவுகளாக உள்ள தமிழகப் பாட்டாளி மக்கள், நம்மை இணைக்கின்ற கருத்துகளை நோக்கி விரைந்து வந்தாக வேண்டும். தமிழர்களின் வாழ்வியல் உரிமைகளுக்கு எதிராக உள்ள அக நிலை மற்றும் புறநிலைக் கருத்துகளைப் புறந்தள்ள வேண்டும். புதிய உலகம் காணுவதற்கும் மாந்த நேயப் பண்பாடுகள் வளர்வதற்கும் தமிழகப் பாட்டாளி மக்கள் முயல வேண்டும். நம்முடைய முன்னோர்கள் எல்லாம் தங்களுடைய உரிமையை விட்டு விட்டு உலகத்தைப் பற்றியும் தனி மாந்த விடுதலையைப்பற்றியும் பேசிக் கொண்டிருந்தனர். புதிய கருத்துகளை நோக்கிச் சிந்திக்கவும் சிந்தனைகள் செயல் வடிவம் பெறுவதற்கும் இளைய தலைமுறையினர் ஆர்வமுடன் உழைக்க வேண்டும். அந்தந்த மொழித் தேசிய இனங்களின் விடுதலை, பாட்டாளி மக்கள் தலைமையில் வளர்ச்சியுறும் போது, மற்ற மொழித் தேசிய இனங்களின் விடுதலை உணர்வும், அதன் அடிப்படையில் பாட்டாளி பிரிவின ஒற்றுமை உணர்வும் மேலோங்கி இறுதியில் உலகப் பாட்டாளி மக்கள் என்னும் சிந்தனையை நோக்கிச் செல்வார்கள்.

'தமிழகப் பாட்டாளி மக்களே, சிந்திப்போம்! செயல்படுவோம்!! உரிமையைப் பெறுவோம்!!!' O

இந்தியாவில்..!

O தில்லியில் உள்ள தொலைக்காட்சி அஞ்சல் கோபுரம் இந்தியாவின் வேறு எந்தத் தொலைக் காட்சி கோபுரமும் போலில்லாமல் சில சிறப்புகளைக் கொண்டதாக அமைத்திருக்கிறார்கள். அதன் உயரம் 235 மாத்திரி (மீட்டர்). இதன் 155-ஆவது மாத்திரி உயரத்தில் மணிக்கு ஒரு முறை சுழன்று கொண்டிருக்கும் உணவகமும், 158.5-ஆவது மாத்திரி உயரத்தில் ஒரே நேரத்தில் 200 பேர்கள் இருந்து சுற்றுப் புறத்தைக் கண்டு களிக்கும் வசதியுள்ள பார்வையாளர் கூடமும் உள்ளன. இது 27 குறுக்கம்(ஏக்கர்) பரப்பளவில் அமைந்துள்ளது. இதற்கு அம்பேத்கர் பெயர் சூட்டப் பெற்றுள்ளது. இதில் மேலும் அறிவியல் கண்காட்சிக் கூடம், பண்பாட்டியல் கூடம், பூங்கா ஆகியவற்றை 8.05 கோடி உருபா செலவில் அமைக்கத் திட்டமிடப் பெற்றுள்ளது.

O புதுவை மாநிலத்தில் உள்ள அரியாங்குப்பம், காக்கையான் தோப்பு அருகில் உள்ள பகுதி அரிக்கமேடு. இங்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பன்னாட்டு வணிகத் துறைமுகம் இருந்துள்ளது. இங்கிருந்து உரோமாபுரி(இத்தாலி), கிரேக்கம் ஆகிய நாடுகளுடன் வணிகத் தொடர்பு இருந்ததாகக் கூறப் பெறுகிறது.

O இந்தியாவில் உயர் கல்விக்கு அதிக முகாமை கொடுக்கப் பெறுகிறது. ஆனால் படித்தும் பட்டம் பெற்றவர்களில் பலர் வேலையில்லாமல் இருக்கின்றனர். இந்த நிலையில் உயர் கல்விக்குக் கொடுக்கப்படும் முகாமையைத் தொடக்கக் கல்விக்குக் கொடுக்க வேண்டும் என்று கடந்த 92 பிப்ரவரியில் பிரிட்டினிலிருந்து தமிழகம் வந்திருந்த கல்வியறிஞர் தெசா பிளாக்ஸ்டோன் என்னும் அம்மையார் கூறியுள்ளார்.

O இந்தியாவில் 13 நடுவண் தொழிற்கழகங்களும், 16014 மாநிலங்கள் அளவுத் தொழிற்கழகங்களும், 337 வேளாண் தொழிற் கழகங்களும் அவற்றிற்கு மொத்தம் 2,60,72,457 + 45,38,882 (வேளாண்) உறுப்பினர்களும் உள்ளனராம்.

O இந்திய அரசுடைமை வைப்பகங்களில் 1991-இல் 1559 ஊழல்கள் நடந்துள்ளன. நாட்டிலுள்ள 28 பொதுத்துறை வைப்பகங்களில் இவை நடந்துள்ளன. இவ்வூழல்கள் தொடர்பாக 50 பணியாளர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். 699 பேர்களுக்கு சிறிய பெரிய தண்டனைகள் வழங்கப்பட்டன. கண்ணுக்குத் தெரிந்த ஊழல்கள் இவை என்பது குறிப்பிடத்தக்கது. O

Scanned with CamScanner

இந்தியாவை மதிப்பிழக்கச் செய்த இழிவான பத்து ஊழல்கள்!

இந்தியா உரிமை அடைந்து 47 ஆண்டுகளில் இதுவரை 10 முகாமையான ஊழல் குற்றச் சாட்டுகள் வெளிவந்து நாட்டையே உலுக்கி உள்ளன.

தற்போது பங்கு ஊழல்! அதற்கு முகாமைக் காரணமான அர்சத் மேத்தா இறுதியாகத் தலைமையமைச்சரான நரசிம்மராவுக்கு ஒரு கோடி அன்பளிப்பு (என்னும் பெயரால் கையூட்டு) கொடுத்ததாக அவர் கூறியது, இப்போது பரபரப்பாகப் பேசப்பெறும் நேரத்தில் இதுவரை நடந்த ஊழல்களைப் பற்றிய செய்திகள் பல உண்மைகளை வெளிப்படுத்துவன.

1. படைத்துறை மலையுந்து(ஜீப்)வாங்குவதில் ஊழல்:

நாடு உரிமை அடைந்த சில ஆண்டுகளில் உருவா 216 கோடிக்கான ஊழல் பரப்பரப்பை ஏற்படுத்தியது. அப்போது பிரிட்டனுக்கு உயர் தூதராக இருந்த **வி.கே.கிருட்டிணமேனன் அரசு** சார்பில் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

மலையுந்துகள் (ஜீப்புகள்) வாங்குவதற்கான உருவா 216 கோடி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட அவர் பின்பு அது தொடர்பான உசாவலைச் சந்திக்க மறுத்து விட்டார். கிருட்டிணமேனன் ஊழல் பற்றி அப்போது பெரும் சிக்கல்கள் எழுந்தன.

2. பஞ்சாப் கெய்ரோன் ஊழல்:

முதன் முதலில் 1963-ஆம் ஆண்டில் அரசியல் மேலிடத்து நடந்த ஊழல் நாட்டையே உலுக்கியது. ஊழல், மற்றும் வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டுதல் ஆகியவற்றில் அப்போதைய பஞ்சாப் முதல்வர் கெய்ரோன் ஈடுபட்டார். இந்தக் குற்றச்சாட்டுகள் பற்றிய தனியொருவர் உசாவலுக்கு அப்போதைய தலைமையமைச்சர் நேரு உத்தரவிட்டார். ஊழல் குற்றச் சாட்டுகள் முறைகேடுகள் மெய்ப்பிக்கப்பட்டதை அடுத்துக் கெய்ரோன் பதவி விலக நேர்ந்தது.

3. நகர்வாலா ஊழல்கள்:

தலைமையமைச்சர் இந்திரா குரல் தொலைபேசியில் உத்திரவிட்டதை அடுத்து, புதுதில்லி நாட்டு வைப்பகத்(State Bank) காசாளர் (cashier) வேத பிரகாஷ் மல்கோத்ரா செயல் பட்டார்.

'1971-ஆம் ஆண்டு மே மாதம் 21-ஆம் பகலன்று, தலைமையமைச்சரிடருந்து வந்த அந்தத் தொலைபேசிச் செய்தியில் இந்திராகாந்தியே தாம அனுப்புகிற ஆளிடம் உருவா அறுபது இலக்கத்தைத் தருமாறு உத்தரவிட்டதாகக் கூறப்பட்டது. ருஸ்தம் ஷோராப் நகர்வாலா என்பவர் அந்தக் கமுக்கமான செய்தியை நாட்டு வைப்பகத்தில் வந்து கூற, மல்கோத்ராவிடம் பணத்தைப் பெற்றதுடன், அதற்கான பெறுதாளை (ரசீதை)த் தலைமையமைச்சர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கூறினார். ஆனால் பணப்பெட்டியைப் பெற்ற நகர்வாலா தலைமறைவாகி விட்டார்.

இந்த ஏமாற்றைக் காவல்துறையிடம் முறையீடு செய்தார், மல்கோத்ரா. இது தொடர்பாகக் காவலர்கள் நகர்வாலாவைத் தளைப்படுத்தி வழக்குப் பதிவு செய்தனர். தமது குற்றத்தை நகர்வாலா ஒப்புக் கொண்டார். நகர்வாலாவுக்கு நான்காண்டுகள் கடுங்காவல் தண்டனை கொடுக்கப்பட்டது. நகர்வாலா பின்னர் கொலைசெய்யப்பட்டார். இதில் என்ன வியப்பு என்றால் அந்தக் குறிப்பிட்ட நாளில் தில்லி நாட்டு வைப்பகக் காசாளருடன், தொலைபேசியில் பேசியதாகவோ அல்லது இல்லை என்றோ இந்திரா காந்தி கூறவில்லை.

4. அந்துலே சிக்கல்:

சர்க்கரை, பைஞ்சுதை(சிமெண்ட்)உட்பட சில பொருள்களுக்கு உரிமம் வழங்க மகாராட்டிர முதல்வர் அந்துலே 1980-82-இல் நன்கொடை (கையூட்டு-இலஞ்சம்) பெற்றார். வணிக நிறுவனங்கள் மற்றும் தொழிலதிபர்களிடம் இருந்தும் இந்த மந்திரி உரிமம் வழங்க பெரிய அளவில் கோடிக் கணக்கில் பணம் பெற்றார், இப்பணத்தை, **'இந்திரா பிரதிஷ்டா பலன்'** என்ற அறக்கட்டளையின் பெயரில் தண்டினார். இது தொடர்பாக நடந்த வழக்கில் தீர்ப்பு அவருக்கு எதிராக முடிந்தது. முடிவில் அவர் முதல்வர் பதவியில் இருந்து நீங்கினார். திரட்டப் பெற்ற பணம் அவர் பாங்கிலேயே இருந்தது.

5. இராமகிருட்டிண எக்டே:

பெங்களூரில் உள்ள பல முகாமையான இடங்களில் 110 குறுக்கம் (ஏக்கர்) நிலத்தை அடுக்கு மாடி வீடுகள் கட்ட வெளிநாட்டு இந்தியர்களுக்குக் கர்நாடக முதல்வராக இருந்த இராமகிருட்டிண எக்டே தந்தார் என்பது ஊழல் முறையீடு.

இதே போல் மைசூரில் 22 ஆயிரத்து 622 சதுர மாத்திரி (மீட்டர்) நிலம் வீடு கட்டும் 'மனைகள்' வாங்கி விற்கும் குழு வொன்றின் முதலாளிக்கு விற்கப் பட்டது என எக்டே மீது இன்னொரு குற்றச் சாட்டு கூறப்பட்டது. இதை உசாவுவதற்கு உச்சநெறி மன்ற நடுவர் குல்தீப் சிங் தலைமையிலான உசாவல் குழு ஒன்று அமைக்கப் பட்டது. குழு தனது உசாவலை முடித்துத் தீர்ப்பு அளிக்கையில் வேண்டியவர்களுக்கு எக்டே சலுகை காட்டினார் என்று குற்றம்

Scanned with CamScanner

சாட்டியது. ஆனால், அதற்கு ஒரு தண்டனையோ விளைவோ ஏதும் இல்லை.

6. செக்கோஸ்லோவாகியா கைத்துமுக்கி:

முன்னால் உள்துறை இணை அமைச்சர் அருண் நேரு மீது ஏப்ரல் 1989-இல் நடுவண் ஒற்றுத் துறை (C.B.I) ஒரு குற்றவியல் (கிரிமினல்) வழக்கு தொடர்ந்தது. செக்கோஸ்லாவாகியா நாட்டிலிருந்து 9.அ.மா.(மி.மீ.) கைத்துமுக்கி வாங்கும் பேரத்தில் அரசுக்கு 22 கோடி இழப்பு என்று வழக்கு தொடரப் பெற்றது. இந்த வழக்கு முடிவு இதுவரை வெளிப்படுத்தப் படவே இல்லை.

7. மாட்டுத் தீவன ஊழல்:

மாட்டுத் தீவன செய்முறை இயந்திரங்கள் 50 இறக்குமதி செய்ய முன்னாள் மாநில அவைத் தலைவர் **பல்ராம் ஜாக்கர்** சில ஆயத்துறை(சுங்க) வரிச் சலுகைகளைத் தந்தார். தமது வெளிநாட்டு நண்பர் பிராடி என்பவரின் தவறுக்காகப் 'பாரத் கிருஷிக் சமாஜ்' என்ற அமைப்பு மூலம் இந்த இயந்திரங்களை இறக்குமதி செய்தார். இதன் மூலம் வருமான வரியாக 3.6 கோடி இழப்பும் வெளி நாட்டுச் செலாவணியாக உரு. 3.5 கோடி இழப்பும் அரசுக்கு ஏற்பட்டது. இது குறித்து வழக்கு உசாவல் ஏதுமின்றி, நிலைமை அப்படியே கிடப்பில் போடப்பட்டு உள்ளது.

8. நீர் மூழ்கிக் கப்பல் ஊழல்:

கடந்த 1981-இல் மேற்கு செர்மனி குழுமம் ஒன்றிடம் ஒப்பந்தம் செய்து, 2 நீர் மூழ்கிக் கப்பல்களை இந்திய அரசு வாங்கியது. H.T.W. என்று அழைக்கப்படும் அந்த நீர் மூழ்கிக் கப்பல் பேரத்திற்கு 7 விழுக்காடு கழிவு (கமிஷன்) எனப்பேசி, அதன் மூலம் இந்திய முகவர்கள் உரு. 30 கோடி பெற்றனர். கழிவு பேசி நீர் மூழ்கிக் கப்பலை வாங்குவது என்ற அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப் பட்டது. இது தொடர்பாக இராசீவ் காந்தி மறைமுகமாக ஊதியம் பெற்றதாகக் குற்றச் சாட்டு. பல வகையான குற்றச் சாட்டுகளுக்கிடையில் இவ்வூழல் அடியோடு மறைக்கப்பட்டது.

9. வானுந்து (ஏர் பஸ்) 320 ஊழல்:

உடனடித் தேவைக்காக ஏ.320 என்னும் ஏர் பஸ் வானூர்திகள 320-ஐ வாங்கியதாக நடுவண் உள்நாட்டு வானூர்திப போக்குவரத்து அமைச்சகம் மற்றும் அதன உயரதிகாரிகள் மீது ஏப்.1990-இல் நடுவண் ஒற்றுத்துறை (C.B.I) வழக்கு பதிவு செய்தது. உருவா 2500 கோடிக்கான வானூர்தி பேரத்தில் கையூட்டும் ஊழலும் இருந்ததாகவும் அதற்கு அதிகாரிகள் உடந்தை எனவும் ஒற்றுத்துறை தனது குற்ற அறிக்கையில் கூறியுள்ளது.

10. போபர்ஸ் தகரி (பீரங்கி) ஊழல்:

சுவீடன் நாட்டைச் சேர்ந்த போபர்ஸ் தகரி (பீரங்கி) வாங்க கையூட்டு வாங்கப் பெற்றது என்பது இராசீவ் மேல் சாட்டப் பெற்ற குற்றச் சாட்டு. கையூட்டு ஊழல் குற்றச்சாட்டை சுவீடன் வானொலி, ஏப்பிரல் 16, 1987-இல் வெளியிட்டது. இந்த பேரத்தில் கிட்டத்தட்ட 6.5 கோடி கை மாறியது என்பது இராசீவ் மேல் சாட்டப்பெற்ற குற்றச்சாட்டாகும். ஆனால் இது பற்றி அரசு பலவாறான பொய்யும் புளுகும் சொல்லி முழுப் பூசணிக் காயையும் சோற்றில் மறைத்தது போல் மூடி மறைத்து விட்டது. O

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கருணாநிதியின் பாஷைப்படி, அமைதிப் பூங்காவான தமிழகம் சுடுகாடாகும் சூழ்நிலை ஏற்படும். "இக் கூட்டத்தில் பேசிய பல்வேறு பேச்சாளர்களும் ஒருவருக்கு மற்றவர் சளைத்தவர் இல்லை என்றுதான் பேசினர்" என்றெல்லாம் கதைத்து விட்டுக் கடைசியில் "இனிக் கூட்டிக் கழித்துப் பார்த்தால், தமிழகம் இனி அமைதிப் பூங்காவாக இருக்குமா? என்ற சந்தேகத்தை அதிகமாகக் கிளப்புகிறது" என்று முடிவுரை கூறியிருக்கிறது.

தமிழ்நாட்டில், நாற்பது ஐம்பது பேர் கூட்டம் போடுவதும், அரசு நடவடிக்கை எடுக்காமல் இருப்பதும், "சுடுகாடாக்கும் சூழ்நிலை ஏற்படுத்துவதாகக்" கூப்பாடுபோடும் தினமலர், பல நூறு ஆண்டுகளுக்கு முன் ஒரு முசுலீம் அரசினால் கட்டப்பட்ட மசூதிதான் இராமன் பிறந்த இடம் என்று கூறிக் கொண்டு, எழுபது கோடிக்கும் மேலாக மக்கள் வாழும் இத்துணைக் கண்டத்திலே, அமைதியைக் கெடுத்து, மதவெறியைத் தூண்டிக் கொலைக்களமாக மாற்ற முயற்சி செய்துக்கொண்டிருக்கிறார்களே, அவர்களை, புனிதமானவர்கள் என்கிறதா? இதற்குக் காரணமாக இருக்கின்ற பூரிசங்கராச்சாரிகளும், மசாலாச் சங்கராச்சாரிகளும், புனிதமானவர்களா? இந்து முன்னணித் தலைவர்களும், விசுவ இந்து பரிசத்துத் தலைவர்களுமாகிய மத வெறியர்கள், புனிதமானவர்களா? மத வெறிக்கு நெய் வார்த்துக் கொண்டு பேயாட்டம் போடும் பித்தர்களின் வினைப்பாடெல்லாம் மிக நெறியானதாகப் படுகிறது. வெகு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய அரசையே அப்புறப் படுத்தப் பதவியிழந்த, பதவிப் பித்தர்கள் முயற்சி செய்வதும் அதற்குத் துணை போகின்ற சங்கராச்சாரிகளும் அச் சங்கராச்சாரிகளின் அடிவருடிக் கும்பல்களும் நாட்டை அமைதிப் பூங்காவாக்க உழைப்பவர்கள். அவர்களின் அடாவடித்தனத்திற்கு அரசு நடவடிக்கை எடுத்தால், ஒரே ஒப்பாரி. "அரசு அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. சட்ட ஒழுங்கு குலைந்து விட்டது" என இவையெல்லாம் தினமலரின் பார்வையில் நெறியாகப் படுகிறது. ஆனால், தமிழ் நாட்டில் தமிழன் இழந்த தனது உரிமைகளை மீட்டெடுக்க, ஒரு சிலர் கூடிப் பேசினாலும், நாடு சுடுகாடாய் விடுகிறது, தினமலரின் ஆராய்ச்சியில். (தொடர்ச்சி-11ஆம் பக்கம்)

Scanned with CamScanner

தமிழன் ஒரு தேசிய இனம், அதே போல் இந் நாட்டில் பல தேசிய இனங்கள் இருக்கின்றன. எந்தத் தேசிய இனத்தையும் சேராத, பொய்களை-யும்,புனைகதைகளையும் கூறிக்கொண்டு மிகச் சிறு-பான்மையரான பார்ப்பனர்கள், அனைத்துத் தேசிய இனங்களிலும் ஊடுருவல் செய்து, ஆட்சியையே ஆட்டிப் படைத்துத் தாங்கள் மட்டும் வளமாக வயிறு வளர்த்துக் கொண்டு மற்றவர்களை எந்த அளவு வயிற்றிலடித்து, இழிவும், கொடுமையும் படுத்துவதோடு, அந்தந்தத் தேசிய இனங்களின் தனித் தன்மைகளைத் தங்கள் நச்சுக் கருத்துகளால் சிதைத்து வருகிறார்கள் என்பதை இப்போது உணரத் தொடங்கி விட்டனர், அதனால் போராடு-கின்றனர். அப்போராட்டம் வலிவடைந்தால் இவர்-கள் வீழ்ச்சி உறுதி. அதற்குத் தான் இவ்வாறெல்-லாம் அலறுகிறார்கள். எந்த நாட்டினத்தையும் சேராத இச் சிறுபான்மையர், நாட்டினர்களின் எழுச்சியையும், உரிமை வேட்கையையும் கண்டு இவ்வளவு வயிற்றெரிச்சல் அடைகின்றனர்.

தமிழ் நாட்டில் இவர்களது வல்லாண்மையின் மீது விழுந்த அடி வலுவானதாய், துடிக்கிறார்கள். இருந்தாலும், அவர்கள் வல்லாண்மை முற்றாக ஒழிக்கப்படவில்லை. அதனால் தான் இவ்வாறு ஏந்து கிடைக்கும் போதெல்லாம தங்கள் நச்சு விதையை விதைக்கத் தொடங்கி விடுகின்றனர். எத்தனை ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டாலும் எப்படியும் அவர்கள் சாய்கால் பெற்றுவிடுகின்றனர். ஆட்சி-யாளர்களின் மெலிவுகளை நன்கு எடை போட்டு அதைப் பயன்படுத்தி வருகின்றனர். ஆட்சியாளர்-களை ஓரளவிற்கேனும் தங்கள் பக்கம் வளைத்துக் கொள்கின்றனர். எடுத்துக்காட்டாக, தமி ழினத்தைத் தாழ்த்தி எழுதுவதிலேயே இன்பங்-காணும் 'தினமலர்' தமிழ்நாட்டின் நூலகங்களிலெல் லாம் காணப்படுகிறது. முன்பு கடுமையாகத் தி.மு.க.வைச் சாடிவந்த மணியன் இன்று புகழ் பாடத் தொடங்கி விட்டார். அந்த மணியனின் இதழ் நூலகமெங்கும் கிடைக்கிறது. அதன் மூலம் தங்கள் நச்சுக் கருத்துகளை விதைக்க ஏந்தாக அமைகிறது. ஆனால் தமிழின நலன் நாடி உண்மையாக உழைத்துவரும் தமிழ் ஏடுகளைத் தமிழக நூலகங்களில் பார்க்க முடிவதில்லை.

இத்தகைய நிலை மாற்றப் பட வேண்டுமானால் மக்கள் மனத்தில் மாற்றம் பெற்றாக வேண்டும். அதற்கு மதுரை மாநாடு போன்ற கூட்டங்கள் தேவையாகத்தான் இருக்கின்றன. மேலும இன்றைய காலக்கட்டத்தில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பொதுவாழ்வானது மிகவும் தரம் தாழ்ந்து விட்டது. இன்னும் சொன்னால், வணிகப் பொருளாகவும், யாரோ சிலர் மட்டும் துய்ப்பதற்கும், கிடைக்காத போது தெருச் சண்டையை விட இழிவாகச் சண்டையிடும் பொருளாகவும் தரம் தாழ்ந்து விட்டது. இந்நிலை நீடிக்கும் வரை, தூய்மையை எதிர்பார்க்க முடி-யாது. அனைத்துக் கட்சியிலும், கள்ளச் சாராயக் கும்பல்களும், அதன் துணை பெற்றவர்களும் வல்லாண்மை மிக்கவர்களாக விளங்குகின்றனர். முன்னணித் தலைவர்கள் அவர்களின் துணைநாடி நிற்கின்றவர்களாக இருக்கின்றனர். அதன்பயன் ஞாயத்தையும் அமைதியையும் நிலைநாட்ட வேண்டிய காவல் துறையும் நடுநிலை கெட்டு விட்டது. அதன் விளைவு வேலியே பயிரை மேயும் நிலை உருவாகி விட்டது. இன்று நடைபெறும் கொலை, கொள்ளை, கள்ளக்கடத்தல், சட்ட மீறல்கள் எல்லாம் காவல் துறையினர் அறியாமல் நடை-பெறுவதில்லை. அவர்கள் துணையுடன்தான் நடை-பெறுகின்றனவோ என்னும் ஐயத்தை உண்டாக்கு-கின்றது. இதற்கு முற்றாகக் காவல்துறையும் பொறுப்பாக்க இயலாதுதான். அதற்குத் தரங் கெட்ட கட்சிக்காரர்களின் பங்கும் உண்டு. இவை யெல்லாம் இந்த இழி செயல்கள் எல்லாம் தினமல-ரின் கண்களில் படுவதில்லை. ஏனென்றால் அவர்கள் வல்லாண்மை நிலை பெற இவையெல்லாம் துணை புரிபவையே!

அவர்களுக்கு துணை போகின்றவர்கள் எத் தகைய இழி மக்களாக இருந்தாலும் அவர்கள் அடிமைகள் ஆகிவிடுவார்கள். பார்ப்பனியத்தின் பொய்கள், புனைக்கதைகள் ஆகியவற்றின் மாய மாலங்களை மக்களுக்கு எடுத்துக் கூறித் தமிழ், தமிழர் நலன் கருதி உழைப்பவர்கள், எத்தகைய அறிஞர்களாக, தூய்மையான வாழ்க்கையுடைய-வர்களாக இருந்தாலும், தினமலர் போன்ற இதழ்-களின் பார்வையில் மிக எளியவர்களே! அந்த உணர்வுதான், திரு. பெருஞ்சித்திரனார் திரு.இராமதாசு, திரு.நெடுமாறன் போன்றவர்-களைத் தினமலர், அவ்வளவு எளிதாகக் குறிப்பிட்ட தற்குக் காரணியம். எனவே இவர்களுக்குத் துணை போகின்ற "இனம் போன்று இனமல்லாதவர்" களாகிய இனக் கேடர்களின் ஆளுமை இம் மண்-ணில் ஒழிக்கப் பட்டாக வேண்டும். இத்தகைய காட்டிக் கொடுக்கும் கோடரிக் காம்புகளாகிய இனக்கேடர்களின் செயற்பாடுகள் வேரும், வேரடி மண்ணும் இல்லாமல் ஒழிக்கப்பட்டாக வேண்டும். தமிழ்நாடு அமைதிப் பூங்காவா, இல்லையா என்பது பற்றிக் கவலையில்லை. எந்த முறையைக் கையாண் டேனும், தமிழ்நாடு எவ்வளவு விரைவில் விடுதலை பெறும் என்பதுதான் முகாமை. இதை உறுதிப் படுத்தும் வகையிலும், தினமலர் போன்ற பார்ப்ப-னீய ஏடுகளுக்கு விடை கூறும் வகையிலும், மதுரையில் கூடிய இளைஞர் பேரவைக் கூட்டங்கள் ஒவ்வொரு நகரங்களிலும் நடைபெற வேண்டும். பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொள்ள வேண்-டும். நடுவணரசின் புலனாய்வுத் துறையினர், நூற்றுக்கணக்கில் குறிப்பெடுத்து நடுவணரசிற்கு அனுப்பப் பட வேண்டும். அதன் வழி நடுவணரசு தமிழ் மக்களின் உண்மை உணர்வுகளை உணர

...வேண்டும். ... தமிழ்நாட்டைக், கதை சொல்லியே வயிறு வளர்ப்பவர்களை வைத்தும், பச்சோந்திகள் மாதிரி நிலைமைக்குத் தக்கவாறு புனைவு செய்யும் அரசியல் கட்சிகளை வைத்தும், வடவரின் அடிவருடிக் கும்பல்களின் துணை கொண்டும் அடக்கி ஆள முடியாது. தமிழனுக்குரிய உரிமைகளை வழங்குவதன் மூலமே, இணைந்து வாழ முடியும். இல்லையானால் அது தனி வழி செய்வது தவிர்க்க இயலாத ஒன்றாகிவிடும் என்பதை உணர்த்த வேண்டும், உணர வேண்டும். இளைஞர் பேரவையை மாபெரும் அணியாக வளர்க்க வேண்டும். இது தன்மானமுள்ள தமிழன் ஒவ்வொருவனின் கடமையாகும். தமிழனுக்குப் பிறந்தவனின் பொறுப்பாகும். இத்தகைய கூட்டங்கள் மக்கள் அனைவரின் கவனத்தையும் சென்றடையுமாறு செய்ய வேண்டும். இதுவே தினமலர் போன்ற இதழுக்குப் பாடமாக அமையும்; தமிழனும் தன்னிலை உணரத் தொடங்கி விட்டான் என்பதை உலகம் அறியும்; அந்நாளே தமிழனின் நன்னாளாகும். O

தமிழகப் பல்கலைக் கழகங்களும் கல்லூரிகளும்!

O சென்னைப் பல்கலைக் கழகத்துடன் 90 கல்லூரிகளும், பாரதிதாசன், பாரதியார் பல்கலைக் கழகங்கள் ஒவ்வொன்றுடனும் 40, 40 கல்லூரிகளும், மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்துடன் 60 கல்லூரிகளும், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்துடன் 47 கல்லூரிகளும் இணைக்கப் பெற்றுள்ளன.

உருசிய நூலகம்!

O உருசியாவில் ஆட்சி மாற்றங்களுக்குப்பின் அங்கு கிரெம்ளின் நகரத்திற்கருகில் உள்ள பெயர் பெற்ற இலெனின் நூலகம், உருசிய நூலகம் என்று பெயர் மாற்றப் பெற்றுள்ளது. 1861-ஆம் ஆண்டு நிகோலாய் ருமியாண்ட்சேவ் என்பவரால் தொடங்கப் பெற்ற இந் நூலகம் அவரது மறைவுக்குப்பின் உருசிய அரசு குடும்பத்திடம் ஒப்படைக்கப் பெற்று, உருசிய, புரட்சிக்குப்பின் அரசுவயமானது. இதில் 40 மில்லியன் (4 கோடி) நூல்கள் உள்ளன.

சொல்லாய்வறிஞர் அருளி அவர்களின்
அரிய புதிய ஆராய்ச்சிப் படைப்பு!

தென்மொழியின் தொண்டு!

(இதன் தொடக்ககாலம் பற்றிய ஒரு மேற்பார்வை)

(தென்மொழி தொடங்கிய 1959-ஆம் ஆண்டில் ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தம் இருபத்தாறும் அகவையில் இருந்த இளமைத் தோற்றப்படம் அட்டையில் மிளிர்கிறது.)

பக்கங்கள் : 90 விலை : உருவா 12.

(அஞ்சல் செலவு தனி)

அறிவன் பதிப்பகம்

'தனித்தமிழ்மனை' தமிழூர்,
காளிக்கோயில் தெரு, புதுவை-605009.

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு-82

நேர்மையும் உண்மையும் மிக்க அரசை ஆட்சியிலிருந்து அகற்றுவது எளிது. கொடுமையும் வஞ்சகமும் சூழ்ச்சியும் உள்ள அரசை ஆட்சியிலிருந்து அகற்றுவது கடினம்.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்: 167.

அனுப்புதல்:

தமிழ்நிலம்
5, அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண் : 847829

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு / திருவாட்டி

உறுப்பினர் :

தனி இதழ் விலை	உரு: 1-50
ஆண்டுக் கட்டணம்	உரு: 36.00
அரையாண்டுக் கட்டணம்	உரு: 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.